516—

கொங்கணாபுரத்தில் உயர்நிலைப்பள்ளி அமைத்தல்

***36745—திரு. க. பழனிசாமி :**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரத்தில் புதியதாக பெண்கள் அரசினர் உயர்நிலைப்பள்ளி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து வரும் மாண்புமிகு இயயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில் இந்த ஆண்டு செய்ய முடியாவிட்டாலும் வரும் ஆண்டில் இதைப் பரிசீலிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரத்தில் புதியதாக பெண்கள் அரசினர் உயர்நிலைப்பள்ளி அமைக்க வேண்டுமென்று இதுவரையில் கோரிக்கை எதுவும் பெறப்படவில்லை. மேலும் பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்கள் முயற்சி எடுத்தபோது ஊர் மக்களும், பெற்றோர்களும் இதற்கான ஆர்வம் காட்டவில்லை; இதற்கான சாத்தியக்கூறுகளை உருவாக்கவில்லை என்று தெரிவித்து இருக்கிறார். அதற்கு அரசுக்கு செலுத்த வேண்டிய தொகை ரூ.60 ஆயிரமும் இதுவரையில் செலுத்தப்படவில்லை. ஆகவே, இந்த நிபந்தனைகள் அனைத்தும் நிறைவு செய்யப்பட்டு, கோரிக்கை வைக்கப்படுமானால் உயர்நிலைக் குழு அதைப் பரிசீலிக்கும். பரிசீலனையின் அடிப்படையில் அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 517, திரு. க. அர்ச்சுனன், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. மு. நடேசன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.